Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | இந்தியா — இலங்கை வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி என் 49

மலர் 7 யாழ்ப்பாணம் குரோதி மாசி 2 ஆம் நாள் ஷவ்வால் பிறை 10 (13-2-65) சனிக்கிழமை இதழ் 5

விநோபா உண்ணாவிரதம் ★ தமிழ்நாட்டில் ஹர்த்தால் ★ ஜனாதிபதியுடன் பிரதமர் ஆலோசனை ★ ராஜாஜி, அண்ணாவை சின்கா சந்தித்தார்

# இந்தி எதிர்ப்பு கிளர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது

## முதன்மந்திரிகளின் அவசர மகாநாடு

சென்னை, பெப். 12

தமிழ்நாட்டில் மாணவர் நடத்திய இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி இன்று நடைபெற்ற பூரண ஹர்த்தாலுடன் ஒத்திவைக்கப்பட்டது. அரசியல் தலைவர்களும் பத்திரிகைகளும் கேட்டுக் கொண்டதற்கிணங்க கிளர்ச்சியை ஒத்திவைப்பதென மாணவர் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிச்சபையின் செயற்குழு தீர்மானித்தது. ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட மாணவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டுமெனவும் செயற்குழு கேட்டுக்கொண்டது.

(6-ம் பக்கம் பார்க்க)

## கோவை, திருச்சியில் மேலும் இருவர் தீக்குளிப்பு

### சுப்பிரமணியம் ராஜினாமாவுக்கு அண்ணா வரவேற்பு; கிளர்ச்சியை நிறுத்த கோரிக்கை

சென்னை, பெப். 12

சென்னை நகரிலும் தமிழ் நாட்டின் இதர முக்கிய இடங்களிலும் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. தமிழ் மொழிக்காக ஐயம்பாளையத்தில் துவக்கப் பள்ளியொன்றின் தலைமையாசிரியரும், சத்திய மங்கலத்தில் ஒரு விவசாயியும் தங்கள் உடலில் தீயிட்டு உயிரை மாய்த்துக் கொண்டனர். மந்திரி பதவியிலிருந்து திரு. சுப்பிரமணியம் ராஜினாமா செய்ததை தி. மு. க. தலைவர் திரு. அண்ணாதுரை வரவேற்றுள்ளார். தமிழ்நாட்டுக் கிளர்ச்சி காரணமாக பூதான இயக்கத் தலைவர் ஆச்சார்ய விநோபாபாவே நெடுநாள் உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளார்.

### பூரண ஹர்த்தால்

மாணவர் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிச்சபையின் வேண்டுகோளுக்கிணங்க சென்னை நகரிலும் மற்றும் முக்கிய இடங்களிலும் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் பொலிசாரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாகவும் அரசாங்கத்தின் போக்குக்கு கண்டனம் தெரிவிக்குமுகமாகவும் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு சபை கேட்டிருந்தது. ஹர்த்தாலில் துறைமுகத் தொழிலாளர்களும், ஆலைத் தொழிலாளர்களும் சேர்ந்துகொண்டனர்; சென்னை அரசாங்க பஸ்கள் இன்று சேவைசெய்யவில்லை, கடைகள், ஹோட்டல்கள் யாவும் மூடிக்கிடந்தன. ஆலைகள் இயங்கவில்லை. ரயில்சேவைகள் சீராக நடைபெறவில்லை. அர

(6-ம் பக்கம் பார்க்க)

**எட்மண்ட் சமரக்கொடி**

இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு

தெல்லிப்பளை அம்பனைச் சந்தியில் பேசுவார்

விடயம்:- தோழர் காராளசிங்கத்தை ஏன் ஆதரிக்க வேண்டும்

## மாநகரசபைக் கூட்டத்தில் மேயர், உதவிமேயர் லடாய்!

### பொலிஸார் அழைக்கப்பட்டு பின்னர் வாபஸ்பெறப்பட்டது

யாழ்ப்பாணம், சனி

நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற யாழ். மாநகரசபையின் பொதுக்கூட்டம், சிறிது நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது. பிற்பகல் 8-30 மணிக்குத் தொடங்கிய கூட்டம் 19 நிகழ்ச்சிகளில் இரண்டாவது நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஊழியர் ஒருவரின் நியமனம் பற்றியும் பின்னர் வாபஸ் பெறப்பட்டது சம்பந்தமான விவகாரம் பற்றிய பிரச்னையில் மேயருக்கும் உதவி மேயருக்கும் ஏற்பட்ட சர்ச்சையைத் தொடர்ந்து மேயர் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்த முடியாமல் ஒத்திவைப்பதாகக் கூறி கூட்டத்தைவிட்டு வெளியேறினர்.

நேற்றைய மாநகரசபையில் பொலிசாரும் அழைக்கப்பட்டு பின்னர் தொலைபேசி மூலம் அது வாபஸ் பெறப்பட்டது. சென்ற கூட்ட அறிக்கையை அங்கீகரிப்பது என்ற நிகழ்ச்சியின் போது மேயரை நோக்கி பொதுமக்கள் கலரியிலிருந்த ஒருவர் கைதட்டி ஏதோ கூறினர். இதைத் தொடர்ந்து முதல்வர் பொலிசாரை அழைக்க உத்தரவிட்டார். பொலிசை அழைப்பது

(6-ம் பக்கம் பார்க்க)

## கைத்தொழில் சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட கைத்தொழில் பொருட்காட்சி சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு
26 E 0605 ரூபா 100,000

இரண்டாவது பரிசு
26 E 0356 ரூபா 14,480

மூன்றாவது பரிசு
02 X 0812 ரூபா 7,240

(3ம் பக்கம் பார்க்க)

## நகரப்பகுதி காரியாதிகாரி பிரிவில் 'ஈழநாடு' நிவாரண நிதி உதவி

'ஈழநாடு' சூறாவளி கஷ்டநிவாரணநிதிச் சபை சார்பாக டாக்டர் கே. கனகரத்தினம், திரு எஸ். சிவஞானம் (காரியாதிகாரி, யாழ்ப்பாணம் நகரப்பகுதி), டாக்டர் கே. வி. சண்முகரத்தினம், திரு. வி. கந்தசாமி ஆகியபோர் யாழ்ப்பாண நகரப் பகுதியில் சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியும், பொருளும் உதவினர்.

உதவிபெற்றோரினதும், உதவிகள் பற்றியதுமான விபரம் வருமாறு:-

திரு. சவரிமுத்துவின் கைம்பெண் கிளாறம்மா,
இரண்டு பிள்ளைகள் 12 வயதும் மூன்றுவயதும். 45-00
(ஒரு துவாய்)

திரு. ஏ. பெரியதம்பியின் கைம்பெண் மைத்திஅம்மா,
4 ஆண்கள், ஒருபெண், மூத்தபிள்ளைக்கு 14 வயது,
பெண்பிள்ளைக்கு 11 வயது. 70-00
(2 துவாய்)

திரு. பி. ஜெயரத்தினத்தின் தாயார் றெஜீனா,
ஒரு தம்பி 12 வயது, இரண்டு தங்கைகள் ஒன்பதும்
நாலு வயதும். 50-00

திரு. எஸ். ஆசீர்வாதத்தின் கைம்பெண் திரேசம்மா,
6 பிள்ளைகள், மூத்தபிள்ளைக்கு 10 வயது. 75-00
(2 துவாய்)

திரு. ஏ. திமோதுறுவின் கைம்பெண் செபமாலை,
2 ஆண்கள். மூத்தபிள்ளைக்கு 8 வயது 45-00
(ஒரு துவாய்)

திரு. எம். ஏ. செல்வராசனின் தாய். 15-00

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கட்மை தவருதவர்களாய், சுயநலமற்றவர்களாய் சேவைபுரிய வேண்டும். நம்முடைய ஒவ்வொரு நடவடிக்கையும் மிகக்கவனமாக மக்களால் கண்காணிக்கப்படுகிறது; பரிசீலிக்கப்படுகிறது.

— காமராஜர்.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மாசி மீ 2 உ. (13-2-65)


## ரயில் நிலைய சம்பவம்

களனி ரயில் நிலையத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தில் பொலிசாரின் துப்பாக்கிக் குண்டுக்கு இருவர் பலியான செய்தி அதிர்ச்சியளிப்பதாகும்.

ரயில் போக்குவரத்துச் சேவை நேர ஒழுங்கின்படி நடைபெருததால் ரயில் நிலையத்தில் திரண்டிருந்த பெருந்தொகையான பிரயாணிகள் ஆத்திரமடைந்து இதர ரயில்கள் அப்பாதையால் செல்லா வண்ணம் பாதைகளைத் தடை செய்ததைத் தொடர்ந்து ரயில் நிலையத்தில் நெருக்கடியான சூழ்நிலைஏற்பட்டிருக்கிறது. ரயில் நிலைய அதிகாரிகளின் கோரிக்கைக்கிணங்க பொலிசார்உதவிக்கு வந்துள்ளனர். பொலிசாரைக் கண்டதும் பிரயாணிகளின் ஆத்திர உணர்ச்சி அதிகரித்திருக்கிறது. இதன் விளைவாக கல் வீச்சும் அதைத் தொடர்ந்து பொலிசாரின் தடியடிப் பிரயோகமும் நடைபெற்றிருக்கிறது. முடிவில் இருவர் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகுர்கள். இருவரினதும் மரணம் பற்றியும் விசாரணை நடைபெற்று வருகிறது. பொலிசார் கட்டதாக ஒருவர் சாட்சியமளித்திருக்கிருர். கடவில்லையென்றும் ஜனத்திரள் துப்பாக்கியைப் பறிக்க முயற்சித்தபோதுதாஞகவே குண்டு பாய்ந்திருக்கிறதென்றும் பொலிஸ் தரப்பில் கூறியிருக்கின்றனர். விசாரணையிலிருக்கும் இவ்விஷயம் பற்றி, நாம் இப்பொழுது கருத்து வெளியிடுவது சரியல்ல.

ஆனுல் பிரயாணிகள் ஆத்திரமடைவதற்கும் ரயில் நிலையத்தில் குழப்பமான நிலை ஏற்படுவதற்கும் காரணம் என்ன என்பது பற்றி ஆராய வேண்டியது அவசியம். இலங்கை ரயில்வேயின் நூற்ருண்டு விழா ஆரம்பமானதிலிருந்து அடிக்கடி ரயில் விபத்துக்களும் ரயில் சேவையில் ஒழுங்கீனமும் ஏற்பட்டு வந்துள்ளன. பலஉயிர்களையும்இந்தரயில்வே பலி கொண்டுள்ளது. சில வாரங்களுக்கு முன் நாம் இப்பத்தியில் ரயில் விபத்துக்கள் பற்றி கருத்து வெளியிடுகையில் ரயில்வே இலாகாவின் அலுவல் நிர்வாகம் குறித்து பூரண விசாரணை செய்வதற்கு பாரபட்சமற்ற விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்க வேண்டுமெனத் தெரிவித்திருந்தோம்

களனி ரயில் நிலையத்தில் நிகழ்ந்துள்ள பரிதாபகரமான சம்பவமும் ரயில்வே இலாகாவின் நிர்வாகம், அலுவல்பற்றி விசாரணை செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

ரயில்சேவை தாமதமாக நடைபெறுவதற்கு ரயில்வே இலாகாவிலுள்ள சில அரசாங்க விரோதிகளின் சதி நடவடிக்கை காரணமாக இருக்கலாமென போக்கு வரத்து அமைச்சர் கருதுகிருர். ரயில் சேவைகளில் தாமதமேற்பட்டதற்கு விபரமான அறிக்கை சமர்ப்பிக்கும்படியும்அவர் கேட்டிருக்கிருர். இது போதாது, உடனடியாக ரயில்வே நிர்வாகம் பற்றி விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லையேல் ரயில்வே இலாகாவை திருத்தியமைக்க வேண்டும்.

# பதினெட்டு ஆண்டுகாலம் தமிழும் சைவமும் வளர்த்த பண்டிதர்திலகம்

## திரு. கிருஷ்ணபிள்ளைக்கு இன்று நடைபெறும் பாராட்டு விழா

— சோ. அமிர்தலிங்கம் —

(பாராட்டு விழாச்சபை இணைக்காரியதரிசி)

கோப்பாய் அரசினர் பயிற்சிக்கலாசாலையின் தமிழ்ப்பீடத்தை அலங்கரித்த அறிஞர்கள் வரிசையில் நமது பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை அவர்களும் ஒருவராவர். தமிழ் கூறும் நல்லுலகம் போற்றிப் புகழ்ந்த பரீட்சையெட்டாப் பண்டிதராகிய ஸ்ரீமான் மகாலிங்கசிவம் அவர்களின் பேரிழப்பினுல் ஈடுசெய்யமுடியாது நின்று தவித்த தமிழினத்துக்கு கைகொடுத்தபெருமை எங்கள் பண்டிதர் ஐயா அவர்களுக்குரியதாகும். காரைநகர் கொடைவள்ளல் அருணசலம் ஆசான் அவர்களுடைய அயரா ஊக்கத்தால் ஆரம்பித்த கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக்கல்லூரி மகளிர்க்கு மாத்திரமாக மாற்றியமைக்கப்பெற்றபின், ஆண்கள் பலாலி இராணுவத்தினரது கட்டிடத்தை பயிற்சிக்கலாசாலையாக ஏற்கநேரிட்டது. ஆதலால் எங்கள் பண்டிதர் ஐயாவும் பலாலி நோக்கி வந்து பதவியேற்று தமிழுக்கும், சைவத்துக்கும், பணிசெய்யும் மூகத்தான் ஆசிரிய மாணவ உலகத்தை உருவாக்கிவந்தார்.

ஆயிரத்துத்தொளாயிரத்து ஐம்பத்தாளும்ஆண்டு தைத்திங்கள் ஒருநாள் அதிகாலை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பயிற்சி மாணவஞக நான் நுழைந்தபோது மெலிந்த உருவம், நிமிர்ந்தநடை கனிந்த பார்வையுடைய ஒரு கனவாளை அங்கு கண்டேன். அவர்தான் எங்கள் அதிபர் அவர்கள் என்பதைப் பின் அறிந்துகொண்டேன். அதிபர் அவர்கள் வழிகாட்ட வகுப்பறை நோக்கிச்சென்றநான் அங்குதன் இக்கற்கண்டு மனிதரைக் கண்டேன். கண்டதும் இவரா நான் கேள்வியுற்ற பண்டிதர் என்ற ஐயம் என்னுள் எழுந்தது. எளிய உடை, இனியபார்வை, தெள்ளிய பேச்சு, வயிறுகுலுங்கச் சிரிக்கவைக்கும் நகைச்சுவை என்பன எனது ஐயத்தைத் தெளியவைத்தன.

அன்ஞெரு நாள் வகுப்பறையில் "மடைப்பயலே மடைக்கதை பேசாதே" யென்று வைத அதே வாய் இன்று "அமுதா" என்று அன்பு சொட்ட அழைத்து ஆசிகள் கூறுகின்றது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கூறுவதுபோல் எங்கள் பண்டிதர் ஐயா அவர்கள்கூறும் "மட்ப் பயல்கள்" மகா அதிர்ஷ்டசாலிகளாகிருப்பார்கள் என்பதில் எதுவித ஐயமுமில்லை.



பண்டிதர் ஐயா அவர்களைப் போன்ற தகைசான்ற பேராசிரியர்கள் பலர் எமது கலாசாலையில் பணிபுரிவதனுலேயே என்னையும் மீண்டும் அங்கு பயிற்சிக்குச் செல்லத் தூண்டிற்று.

பண்டிதர் ஐயர் அவர்களின் எளிய வாழ்க்கைமுறை அவர் வாழ்ந்த கலாசாலை அறையின் தோற்றம் அவரின் நடைமுறைகள் என்பன எம்மைக் கவர்ந்து அவர்பால் ஈடுபாடுகொள்ளச் செய்தன. சைவத்தையும் தமிழையும் பண்டைக்கால வரன்முறையை பொட்டி தம்மிரு கண்கள் எனப் போற்றிப் பாதுகாத்து வந்தவர் எமது பண்டிதர் ஐயா அவர்கள் தன்னினம், தன்மொழி, தன்மதம் என்பவற்றில் அயராத கரிசனையுடைய அரசியல் கலப்பற்ற பண்டிதர் ஐயா அவர்கள் பிற மதத்தினரை, பிற இனத்தவரை எவ்வகையாலும் நோகச்செய்யாது அன்னவர்களையும் என்றும் தம்மால் அன்புகொள்ளச் செய்தாரென்ருல் இதைவிட இவரின் சீரிய பண்பை எடுத்து இயம்ப வேறும் சான்றுகள் வேண்டுமா.

பதினெட்டு ஆண்டுகாலம் ஆசிரியப் பணியும் சமயப்பணியும் புரிந்த பண்டிதர் ஐயா அவர்கள் சென்ற ஆண்டு முதல் தம் பணியினின்றும் ஓய்வு பெற்ருரெனினும் அவர் ஓய்ந்துவிட்டாரென்று கூறுவதற்கில்லை. பண்டிதர் ஐயா அவர்களின் நகைச்சுவை உரையாடல்களும் தமிழுடன் இடையிடையே கலந்த ஆங்கிலப் பேச்சும் இவ்வாண்டு கலாசாலையுள் காலெடுத்துவைத்த புது மாணவ மாணவிகளையும் மயக்கிவிட்டன என்பதை அவர்களின் அருகிருந்து நான் அறிந்துகொண்டேன். அவர் நகைச்சுவை கொட்டச் சொல்லும் 'பகடி'கள் எம்மை எல்லாம் அவர்பால் கிட்ட இழுத்துச் செல்கின்றன.

பண்டிதர் ஐயா அவர்களின் சேவைகளை தொடர்ந்தும் தமிழுலகம் துய்க்க இறைவன் அவருக்கு இன்னருள்பாலிப்பாஞக.

[பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளையின் தமிழ்ச்சேவை நலம் பாராட்டுவிழா இன்று பி. ப. 3-00 மணிக்கு பலாலி ஆசிரியர் கழகத்தில் நடைபெற விருப்பதையொட்டி இக் கட்டுரை வெளியிடப்படுகிறது.]

## வாஞெலி இணைத்த பஸ்கள்

கொழும்பு, வெள்ளி

இலங்கை போக்குவரத்து சபை, வாஞெலி இணைக்கப்பட்ட 22 புதிய பஸ்களை வருவித்துள்ளது. அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட பஸ்களில் வாஞெலி இணைத்த பஸ்களும் அடங்கியுள்ளன. இந்த பஸ்கள் உல்லாச பிரயாணிகளின் [illegible] உட்படும்.

## கைத்தொழில் கூவிப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா 100 பரிசு பெறும் 100 டிக்கிட்டுகளின் விபரம்:-

| | | |
|---|---|---|
| 21 H 0851 | 03 A 0706 | 08 F 0745 |
| 23 D 0332 | 01 B 0414 | 09 P 0401 |
| 08 G 0515 | 20 Q 0978 | 18 P 0191 |
| 17 B 0321 | 18 J 0851 | 02 Y 0756 |
| 15 G 0979 | 20 A 0137 | 04 Y 0217 |
| 17 Z 0696 | 25 Y 0963 | 11 A 0311 |
| 26 S 0756 | 09 I 0525 | 20 L 0356 |
| 03 Y 0148 | 26 U 0027 | 13 M 0815 |
| 07 B 0094 | 23 Y 0419 | 22 E 0431 |
| 18 X 0199 | 01 Q 0685 | 06 R 0135 |
| 04 L 0370 | 16 G 0130 | 01 X 0734 |
| 08 T 0516 | 20 V 0676 | 25 Y 0993 |
| 06 M 0127 | 15 F 0792 | 17 J 0601 |
| 06 H 0380 | 20 M 0658 | 03 P 0024 |
| 25 T 0955 | 18 T 0851 | 24 F 0059 |
| 06 U 0884 | 17 A 0828 | 07 Q 0519 |
| 13 Z 0050 | 24 S 0483 | 10 Z 0693 |
| 13 L 0867 | 10 C 0612 | 02 A 0041 |
| 14 Y 0535 | 18 F 0030 | 02 P 0066 |
| 09 N 0887 | 08 V 0172 | 17 R 0323 |
| 21 C 0536 | 25 N 0256 | 03 D 0566 |
| 01 K 0163 | 19 E 0696 | 18 E 0154 |
| 16 D 0146 | 21 I 0765 | 06 Z 0942 |
| 26 Y 0621 | 21 T 0478 | 21 T 0832 |
| 25 Y 0144 | 21 Z 0272 | 08 X 0928 |
| 01 J 0976 | 22 S 0227 | 20 S 0652 |
| 15 E 0036 | 23 K 0229 | 26 Q 0967 |
| 11 L 0490 | 12 P 0354 | 01 H 0006 |
| 10 L 0001 | 03 D 0529 | 13 J 0947 |
| 10 W 0491 | 06 J 0756 | 09 L 0576 |
| 20 G 0870 | 03 Y 0644 | 17 V 0628 |
| 12 F 0782 | 02 C 0277 | 03 G 0395 |
| 20 W 0706 | 27 L 0389 | |
| 01 I 0953 | 24 D 0445 | |

## கரையோரப் பகுதிக்கு குடிநீர் விநியோகம்

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை நகரசபை, கரையோரக் குடியிருப்பாளர்கட்கு, அவர்கள் உவர்நீர்க் கிணறுகளால் நீண்டகாலமாக அநுபவித்துவரும் கஷ்டத்தைப் போக்குமுகமாக நல்ல குடிநீர்வழங்கும் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

கப்பர் மட்டத்தில் இருந்து தும்பளை வரை காலையும் மாலையுமாக நாளொன்றுக்கு இருமுறை விநியோகம் செய்யும் இந்த நல்ல நீருக்கு கலன் ஒன்றுக்கு ஒருசத வீதம் பணம் அறவிடப்படுவதாயும் நாளொன்றுக்கு 1200 கலன் நீர் கொடுக்கப்பட்டு வருவதாயும் தெரிய வருகிறது.

இத்திட்டம் இப்போது கரை யோரத்துடன்மட்டும நிற்கின்ற போதிலும் மிக விரைவில் இது விஸ்தரிக்கப்படலாம் எனவும் கூறப்படுகிறது.

## பஸ்சேவை நிறுத்தப்பட்டது

### மக்கள் கஷ்டம்

பனை, வெள்ளி

கடந்த மூன்று மாத காலமாக பளையில் இருந்து யாழ்ப்பாணம் சென்றுவந்த அதிகாலை பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளமையால் அதிகாலை பஸ் பிரயாணிகள் பலத்த கஷ்டத்துக்கு உள்ளாகிவருகின்றனர். பளையில் இருந்து யாழ்ப்பாணம் கல்வி கற்கச் செல்லும் மாணவர்கள் அதிகாலையில் கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய சந்தைகளுக்கு வியாபாரம் செய்யச்செல்லும் சந்தை வியாபாரிகள் ஆகியோர் பெரிய கஷ்டமடைந்து வருகின்றனர். எழுதுமட்டுவாள், மிருசுவில் மக்களும் கஷ்டத்துக்குள்ளாகிவருகின்றனர்

இதுகுறித்து புலோப்பளைக் கிராமசபைத் தலைவர் திரு. ஏ. ஜி. ராஜசூரியர் இ.போ.ச. அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோதும் இதுவரை இதுகவனத்துக்கெடுக்கப்படாதது பற்றிமக்கள் கவலையடைந்து வருகின்றனர்.

## நீவின் - சாஸ்திரி கூட்டறிக்கை

புதுடில்லி, பெப். 12

இந்தியாவில் தனது எட்டு நாள் விஜயத்தை முடித்துக் கொண்ட பர்மிய புரட்சிச் சபைத் தலைவர் ஜெனரல் நீவின் இன்று பாகிஸ்தானுக்குப் பிரயாணமானுர்.

ஜெனரல் நீவினும் இந்தியப்பிரதமர் சாஸ்திரியும் தமது பேச்சுவார்த்தைகளின் இறுதியில் விடுத்த கூட்டறிக்கையில் இந்தோசீனப் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கு இந்தோசீனுவுக்கான 1954-ம் வருடத்திய ஜெனிவா மகாநாட் போன்று ஒரு மகாநாடு கூட்டு வேண்டுமென யோசனை தெரிவித்துள்ளனர்.

## லட்சக்கணக்கில் குடும்பங்கள் கஷ்டம்

கொழும்பு, வெள்ளி

தற்பொழுது நாடெங்கும் நிலவிவரும் வரட்சி காரணமாக ஒரு லட்சத்துக்கும் அதிகமான குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக சமூக சேவைப்பகுதி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் நாள் செல்லச்செல்ல திட்டங்களை அதிகரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்றும் அதற்கு நிதிவசதிகள் இருக்குமா என்பதுபற்றி தாம் சந்தேகப்படுவதாகவும் சமூக சேவைப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இந்தோனேஷியா விலகியது

ஜாகர்த்தா, பெப். 12

சர்வதேச தொழில் ஸ்தாபனத்திலிருந்து இந்தோனேஷியா விலகிக்கொள்வதாக இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணே நேற்று அறிவித்தார்.

ஐ.நா.விலிருந்து இந்தோனேஷியா விலகியதால் இந்தோனேஷியா வலுவிழந்துவிடவில்லை யென்றும் அவர் சொன்ஞர்.

## இலவச திரைப்படம்

தொல்புரம், வெள்ளி

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலையின் ஆதரவில் இலங்கை - அமெரிக்கத் தகவல் பகுதியினரால் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை நிலைய விளையாட்டு மைதானத்தில் ஓர் இலவச சினிமாப்படக் கண்காட்சி காண்பிக்கப்படும். அத்தருணம் பல வர்ணப் படமும், பெரியாரகளின் வாழ்க்கை சம்பந்தமான படங்களும் காண்பிக்கப்படும்.

## லூர்துமாதா தேவலய உற்சவம்

பருத்தித்துறை, வியா.

பருத்தித்துறையைச் சேர்ந்த தும்பளை லூர்துமாதா தேவாலய வருடாந்த உற்சவங்கள் இன்று அதிகாலை நடைபெற்ற பூசையுடன் நிறைவெய்தியது. நேற்றைய தினம் மாலை நடைபெற்ற திருவுருவ சுற்றுப் பிரகாரத்திலும் ஆராதனைகளிலும் சுமார் 4000க்கு அதிகமானேர் கலந்துகொண்டனர்.

## நகரசபையின் நிதி உதவி

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை நகரசபையின் விசேஷக் கூட்டம் ஒன்று சபைத் தலைவர் திரு. க. நடராசா தலைமையில் நடைபெற்றபோது சமீபகால புயலால் தலைவர்களை இழந்த மூன்று மீனவர்களது குடும்பங்களுக்கும் தலா 200 ரூபா வீதம் வழங்குவதென முடிவுசெய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மந்திரி பதவியை சுப்பிரமணியம், அழகேசன் உதறித்தள்ளினர்

## "ராஜினுமா, எதிர்பாராதது; பெரும் கவலை தருவது"

— சாஸ்திரி

### மொழிப்பிரச்னையில் ஏற்பட்ட வேற்றுமையை நீக்க நந்தா முயற்சி







புதுடில்லி, பெப். 12

**மொழிப் பிரச்னையில் கருத்துவேற்றுமை ஏற்பட்டது காரணமாக இந்திய மத்திய மந்திரிசபையில் உணவுவிவசாய மந்திரியாகப் பதவிவகித்து வந்த திரு. ஸி. சுப்பிரமணியமும் மத்திய மந்திரிசபையில் பெட்ரோலியம், ரசாயனத் துறை ராஜாங்க மந்திரியாகக் கடமையாற்றிய திரு. ஓ. வி. அழகேசனும் தமது பதவிகளை ராஜினுமாச் செய்து கொண்டனர்.**

அரசியல் சாஸனப்படி இந்தி ஆட்சிமொழியாக வந்துள்ள போதிலும் இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் நாட்டில் துணைமொழியாகவும் தொடர்பு மொழியாகவும் நீடிக்குமென்று மறைந்த பிரதமர் நேரு அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படும் என்றும் இந்தி பேசாதவர்கள்மீது இந்தி வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படமாட்டாது என்றும் இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர்சாஸ்திரி நாட்டு மக்களுக்கு நேற்றிரவு வானெலிமூலம் செய்தி விடுத்த சிலமணி நேரத்துக்குள் திரு. சுப்பிரமணியமும், திரு. அழகேசனும் தமது ராஜினுமாப் பத்திரங்களைப் பிரதமருக்கு அனுப்பிவைத்தனர்.

"எங்களுக்கு இந்தி தெரியாது. மத்திய அரசாங்கத்தில் ஆங்கிலம் இல்லையெனில் நாங்கள் (டி. டி. கிருஷ்ணமாச்சாரியும், ஸி. சுப்பிரமணியமும்) அங்கே (மத்திய அரசாங்கத்தில் இருக்கமாட்டோம்" என்று மத்திய அரசாங்க நிதிமந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி நேற்றிரவு சென்னை வானெலியில் உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்ட சிறிது நேரத்துக்கெல்லாம் திரு. சுப்பிரமணியமும் திரு. அழகேசனும் தமது மந்திரிப் பதவிகளை ராஜினுமாச் செய்யும் கடிதங்களை பிரதமருக்கு அனுப்பி வைத்தனர்.

### எதிர்பாராதது; கவலையளிப்பது

திரு. சுப்பிரமணியத்தினது ராஜினுமாக் கடிதம் கிடைத்த பின் பத்திரிகை நிருபர்களின் கேள்வியொன்றுக்குப் பிரதமர் சாஸ்திரி பதிலளிக்கையில், "இந்த ராஜினுமா எதிர்பார்க்கப்படாதது; பெரும்கவலையளிப்பது;தேவையற்றது"என்றுகுறிப்பிட்டார். ராஜினுமாவை வாபஸ் பெறும்படி செய்வதில் நாம் முயற்சி செய்து வருகிறேம். அவர்கள் அதை வாபஸ் பெற்றுக் கொள்வார்களென்றே நம்புகிறேம் என்று திரு. சாஸ்திரி தெரிவித்தார்.

### நந்தா சமரச முயற்சி

உள்னவிவகாரமந்திரி திரு. குல்சாரிலால்நந்தா திரு. சுப்பிரமணியத்தைச் சந்தித்துப் பேசி பேசினர். ராஜினுமாவை வாபஸ்பெற்றுக் கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டாகத் தெரிகிறது. இதன்பின் திரு. நந்தா பிரதமர் சாஸ்திரியையும் சந்தித்துப் பேசினு;

### மற்றவர்களும் பின்பற்றலாம்

திரு. சுப்பிரமணியத்தின் ராஜினுமா மத்திய மந்திசபையிலும் தமிழ்நாட்டு அரசாங்கத்திலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. காங்கிரஸ் அக்கிராசனர் திரு. காமராஜர் இன்று திரு. சுப்பிரமணியத்தையும் திரு. அழகேசனையும் சந்தித்துப்பேசக் கூடுமா என எதிர்பார்க்கப்படுகிறது. திரு. சுப்பிரமணியம் தமது ராஜினுமாவை வாபஸ் பெருவிடில் மத்திய அரசாங்கத்தில் மந்திரி பதவிவகிக்கும் இதரதென்னுட்டவர்களும் அவரைப் பின்பற்றி ராஜினுமாச் செய்யக்கூடுமென அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

### இதர ராஜ்யங்களுக்கும் பரவுகிறது

இந்தி ஆட்சிமொழியாவதை எதிர்த்து தமிழ் நாட்டில் மாணவர்கள் ஆரம்பித்த கிளர்ச்சி இப்பொழுது மைசூர், கேரளம், ஆந்திரா ஆகிய தென்னிந்திய ராஜ்யங்களிலும் புதுச்சேரியிலும் வட இந்தியாவில் வங்காள ராஜ்யத்திலும் பரவியுள்ளது. தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் விளைவாக பல தபால் நிலையங்கள், பொலிஸ் நிலையங்கள், ரயில் நிலையங்கள் ஆகியவைகளும் மற்றும் பொதுச்சொத்துக்களும் பெரும் சேதமடைந்துள்ளன.

### அழைப்பு

புதுடில்லி, பெப். 12

பர்மாவுக்கு விஜயஞ்செய்யுமாறு பர்மியப் புரட்சிச்சபைத் தலைவர் ஜெனரல் நீவின் விடுத்த அழைப்பை இந்திய ஜனுதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனும் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

### குருஷ்சேவ் தம்பதிகள்

மாஸ்கோ, பெப். 12

ரஷ்யாவில் இப்பொழுது சளிச்சுரம் ('புளு') தீவிரமாக பரவிவருகிறது. இதுவரை இந்நோய் காரணமாக 15 பேர் இறந்துவிட்டனர். சளிச்சுரத்துக்கு ஆளாகிய சுமார் அரை லட்சம் பேர்களில் முன்னுள் ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவும் அவரதுபாரியாரும்அடங்குவர். இவர்கள் இருவருக்கும் கடுமையான சளிச்சுரம் பிடித்திருப்பதாக அறிவிக்கப்படுகிற

### வடவியட்னும் நிலைகள் மீது அமெரிக்கா தாக்குதல்

#### 7 அமெரிக்க விமானங்களை வடவியட்நாம் சுட்டு வீழ்த்தியது

லண்டன், பெப். 12

**வடக்கு வியட்நாம் ராணுவ நிலைகள்மீது அமெக்க, தென்வியட்நாம் போர்விமானங்கள் நேற்றுக் கடும் தாக்குதல் நடத்தின. 150 அமெரிக்கர்களும் மற்றும் தென்வியட்நாமியரும் மூன்று தடவைகளாக வடக்கு வியட்நாம் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தினர்.**

மூன்று அமெரிக்க கடற்படை விமானங்களை வடக்கு வியட்நாமியர் சுட்டுவீழ்த்தியதாக வாஷிங்டனில் வெளியான அறிக்கையொன்று கூறியது. ஆனுல் ஏழு அமெரிக்க கடற்படை விமானங்களைச் சுட்டுவீழ்த்தியதாகவும் மற்றும் ஏழுவிமானங்களைச் சேதப்படுத்தியதாவும் ஒருவிமானியைக் கைது செய்து வைத்திருப்பதாகவும் ஹனுய் ரேடியோ தெரிவித்தது.

தென்வியட்நாம் மீது வடக்கு வியட்நாம் 'வியட்காங்' கொரில்லாக்கள் நேற்று முன்தினம் நடத்தியதாக்குதலுக்கு எதிராக நேற்று அமெரிக்கரும் தென்வியட்நாமும் பதில் தாக்குதல் நடத்தியதாக சைகோனிலும் வாஷிங்டனிலும் அறிவிக்கப்பட்டது. அமெரிக்கா நேற்று நடத்திய தாக்குதல் மிகவும் மோசமானதென்றும் இது யுத்த நடவடிக்கையாகுமென்றும் சர்வதேச சட்டவரம்பு நெறிகளுக்கே முற்றிலும் முரணுகுமென்றும் வடக்கு வியட்நாம் அரசாங்கம் தெரிவித்தது. தென்வியட்நாமில் ஏவாயுதம் பொருத்தப்பட்ட போர்விமானங்கள் கொண்டுவந்திருப்பது தென்கிழக்காசியாவுக்கே ஆபத்தானதென லாவோஸுக்கான சர்வதேச கட்டுப்பாட்டுக் கமிஷனுக்கு வடக்கு வியட்நாம் உத்தியோக பூர்வமாக புகார்செய்துள்ளது.

#### ஜோன்சன் ஆலோசனை

வியட்நாம் நிலைமை பற்றி அமெரிக்க ஜனுதிபதி திரு. லின்டன் ஜோன்சன் நேற்று அமெரிக்க மந்திரி சபையைக் கூட்டி அவசர ஆலோசனை நடத்தினுர்,வியட்நாம் நிலைமை பற்றி அமெரிக்க அதிபருடன் பிரிட்டிஷ் பிரதமர் தொடர்பு கொண்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

இந்தோ சீனத்துக்கான 1954-ம் வருடத்திய ஜெனிவா மகாநாட்டுக்கூட்டுத் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ளப்போவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

#### பாதுகாப்புச்சபை செல்லுமா?

வியட்நாம் சம்பவங்களை ஐ. நா. பாதுகாப்புச்சபைக்குக் கொண்டுசெல்வதுபற்றி ஐ. நா. தலைமைக்காரியதரிசி யுதாண்ட் ஆலோசனைசெய்து வருகிறுர்.

#### பாப்பரசர் வேண்டுகோள்

வியட்நாமில் அமைதியைப் பாதுகாக்குமாறு ஆறுவது சின்னப்பபாப்பரசர் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### மலேஸியாவில் மவுண்ட்பேட்டன்

கோலாலம்பூர், பெப். 12

பிரிட்டன் பாதுகாப்புத் தலைவர் அட்மிரல் ஏர்ல் மவுண்ட்பேட்டன் நேற்றிரவு இங்கு வந்துசேர்ந்தார். மலேஸியா இந்தோனேஷியத் தாக்குதல் சம்பந்தமாக மலேஸியாவுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் எந்த வகையில் உதவிசெய்யவேண்டும் என்பது பற்றி இவர் மலேஸியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான், உதவிப் பிரதமரும் பாதுகாப்பு மந்திரியுமான அப்துல் ரஸாக், மலேஸிய பாதுகாப்புசேவைத் தலைவர் லெப்டினண்ட் துங்கு ஒஸ்மான் ஆகியோருடன் மவுண்ட்பேட்டன் பிரபு பிரிட்டிஷ் உதவிகள் எந்தவகையில் இருக்கவேண்டுமென்பது பற்றியும் அதற்கான வழிவகைகள் பற்றியும் ஆராய்ந்தார்.

### 100 கிணறுகளில் பரிசோதனை

நல்லூர், வெள்ளி

"யாழ்ப்பாணப் பிரதேசத்தை வரண்ட பாலைவனமாகாது நீர்வளமுள்ள பிரதேசமாக மாற்ற முடியும். என்று நீர்ப்பாசன இலாகா உதவி டைரக்டர் திரு. எஸ். ஆறுமுகம் தெல்லிப்பழையில் நடைபெற்ற மகாநாடு ஒன்றில் பேசும்போதுதெரிவித்தார்.

கிணற்று நீர் ஊற்றுதல், நன்னீர் உவர் நீராகுதல் பற்றி ஆராயும்பொருட்டு வலி-வடக்கிலுள்ள பாடசாலை அதிபர்கள், விஞ்ஞான ஆசிரியர்கள், கிராமசேவையாளர்கள் கொண்ட மகாநாடு காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இம் மகாநாட்டில் உதவி டைரக்டர் திரு. எஸ். ஆறுமுகம் பேசியதாவது:—

"இஸ்ரேலில் இருந்து இலங்கை வந்துள்ள நிபுணர்களின் திறமையைப் பயன்படுத்தி நாம் நமது பிரதேசங்களை வளமுள்ளதாக்க வேண்டும். யாழ்ப்பாணக் குடாநாடு வரட்சி மிகுந்த வனந்தரமாக மாறிவிடாமல் நீர்வளமுள்ள பிரதேசமாக மாறக்கூடும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் நீர்ப் பரிசோதனை தண்ணீர் இறைப்பதனைக் குறைப்பதற்கோ, கிணறுகள் தோண்டப்படாமல் தடுப்பதற்கோ அல்ல, மக்களுக்கு உதவும் வகையிலேயே இந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. டி. முருகேசம்பிள்ளை பேசும்போது, இப்போது மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளுக்கு உதவும் ஒவ்வொருவரும் எதிர்காலச் சந்ததியினரின் நன்றிக்குப் பாத்திரமாவார்கள் என்றும் இப் பணியில் தேசாபிமானத்துடனும் விசுவாசத்துடனும் மக்கள் ஈடுபட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

வலி-வடக்கில் 100 கிணறுகள் நீர் பரிசோதித்துத் தெரிவு செய்யப்பட்டன. பரிசோதனை நடத்த 12 சிரேஷ்ட கல்லூரிகள் தெரிவு செய்யபட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாளி வர்க்கம் அரசாங்கத்தை வீழ்த்தியது

## வரவு - செலவுத்திட்டம் அமுலானால் வேலையில்லாப்பிரச்னை தீர்ந்திருக்கும்"

### உடுவிலில் டாக்டர் கொல்வின்

மாவிட்டபுரம், வெள்ளி "நாட்டிலிருந்து வெளிச் செல்வதைத் தடுக்க நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா தமது வரவுசெலவுத் திட்டத்தில் பல யோசனைகளைத் தெரிவித்திருந்தார். இங்குள்ள வெளிநாட்டு கம்பெனிகள் இலங்கையில் வகுவித்த "பணத்தில் ஒரு சதத்தையேனும் வெளியேகொண்டு சல்ல அனுமதித்திருக்கமாட்டோம்" என்றும் அவர் தெரிவித்திருந்தார். ஆனால், இந்த யோசனைகளுக்கு ஏதிராக பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கைப் பிரதமருக்கு மூன்று கண்டனக் கடிதங்கள் எழுதியிருந்தது. இவற்றையெல்லாம் தட்டிக்கழித்து, எதற்கும் தயார் என்று கூட்டாட்சி மந்திரிசபை முடிவெடுத்த சமயத்தில், ஏகாதிபத்தியவாதிகள் இந்த அரசாங்கத்தை வீழ்த்திவிட்டனர்" என்று நேற்று உடுவில் ஆலடிச்சந்தை மைதானத்தில் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பேசுகையில் கூறினர்.

உடுவில் தொகுதியில் ஐக்கிய இடதுசாரி அபேட்சகராகப் போட்டியிடும் திரு நாகலிங்கத்தை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்துக்கு, சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி முன்னாள் அதிபர் திரு. சி. சுப்பிரமணியம் தலைமைவகித்தார்.

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா மேலும் பேசுகையில், பட்ஜட் யோசனையில் தெரிவிக்கப்பட்டது போல், 8 கோடி ரூபாவையும் வெளிநாட்டுக்குப் போகவிடாமல் தடைசெய்தால் இப்பணத்தைக் கொண்டு பல தொழிற்சாலைகளை நிறுவி, வேலை இல்லாத் திண்டாட்டத்தையும் ஓரளவு குறைத்திருக்கலாம் என்றும் கூறினர்.

பட்ஜட்டில் கொண்டுவரப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்களைப் பிற்போக்குச் சக்திகள் முறியடித்துவிட்டன என்று கூறிய அவர் பாடப் புத்தகங்களைக் கூட்டரசாங்கம் குறைந்த விலைக்கு வழங்குவதுடன் பல சலுகைகளையும் பொதுமக்களுக்கு அளித்திருக்கும் என்றும் கூறினர்.

டாக்டர் என். எம். பெரேராவின் பட்ஜட் யோசனைகள் அமுல்செய்யப்பட்டிருந்தால் உள்நாட்டிலுள்ள பெரிய முதலாளித்துவத்தினர் பாதிக்கப்பட்டிருப்பார்கள். நிலச்சுவாந்தார்கள் தங்களிடமுள்ள மேலதிகமான காணிகளை விற்கவேண்டியிருக்கும். டசின் கணக்காக வீடுகளை வைத்திருக்கும் பெரிய முதலாளிகள் அந்த வீடுகளில் குடியிருப்பாளர்களுக்கு மிகவும் குறைந்த விலையில் வீடுகளை விற்க வேண்டியிருந்திருக்கும். நாட்டின் நலனைக் கருத்திற்கொள்ளாத பெரிய முதலாளி வர்க்கத்தினர் வெளிநாட்டு முதலாளி வர்க்கத்தினருடன் சேர்ந்து கூட்டாட்சியை வீழ்த்திவிட்டனர் என்றும் டாக்டர் கொல்வின் குறிப்பிட்டார்.

சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் பேசுகையில் "பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டபின்னர் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் சிறுபான்மைமக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறதென்றும் அரசாங்கத்தின் முற்போக்குத் திட்டங்களுக்கு ஆதரவளிக்கவேண்டும்" என்றும் கூறினர்.

பருத்தித்துறைத் தொகுதி அபேட்சகராகப் போட்டியிடும் திரு. மோதிலால்நேரு பேசுகையில் பல கட்சிகள் மொழிப் பிரச்னை குறித்துப் பல் கருத்துகளையும் உறுதிமொழிகளையும் தெரிவிக்கின்றன. ஆனால் இடதுசாரி அரசாங்கம் ஒருவருடகாலத்துக்குள் மொழிப் பிரச்னைக்குத் தீர்வுகாணுமென்று கூறினர்.

இடதுசாரிக் கூட்டரசு தமிழர்களுக்குரிய உரிமைகளைப் பறிக்கவில்லை. இதனை யாரும் மறுத்தால் அதை நான் சவாலாக ஏற்பேனென்றும் திரு. மோதிலால் நேரு கூறினர்.

திரு. நாகலிங்கம் பேசுகையில் தேர்தலுக்குப் பின் யாருடன் கூடடுச்சேருவோமென்பதை இப்பொழுது கூறும் ஒரே கட்சி தங்களின் கட்சி மட்டுமே என்றும் தேர்தலுக்கு முன்னும் பின்னும் முரணான வாக்குறுதிகள் தாங்கள் அளிப்பதில்லை என்றும் கூறினர்.

திருவாளர்கள் கே. சிவகுரு, ஜி வைகுந்தவாசன், எஸ். நாகராசா ஆகியோரும் பேசினர்.

## 'ஈழகேசரி' பொன்னையா நினைவு விழா

யாழ்ப்பாணம், சனி 'ஈழகேசரி' பொன்னையா ஞாபகார்த்த விழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ந் திகதி குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் ஆதரவில் நடைபெறும். ஞாபகார்த்த விழாவையொட்டி அகில இலங்கை அடிப்படையில் பேச்சுப் போட்டி ஒன்றை நடத்தவும் ஒழுங்குகள் மேற்பட்டுள்ளன. பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு தங்க,வெள்ளி பதக்கங்கள் பரிசளிக்கப்படும். பேச்சுப் போட்டியில் பங்குபற்ற விண்ணப்பிக்கும் கடைசித் திகதி மார்ச் மாதம் 8ந் திகதி என சன்மார்க்கசபை காரியதரிசி தெரிவித்துள்ளார்.

## திருக்குறள் மகாநாடு மல்லாகத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம், சனி மல்லாகம் இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் எதிர்வரும் 15, 16ம் திகதிகளில் திருக்குறள் மகாநாடு நடைபெறவிருக்கிறது. மல்லாகம் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கும் இந்த திருக்குறள் மகாநாட்டில் மாணவர் அரங்கு, கவிஅரங்கு, உரைஅரங்கு, இசைஅரங்கு, கருத்தரங்கு ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. இவ்வார இந்நிகழ்ச்சிகளில் ஈழத்தின் பிரபல கவிஞர்கள், பேச்சாளர்கள், இலக்கிஞர்கள் பங்குபற்றுகின்றனர்.

இரகசிய பொலிஸ்:

## தீ விபத்துபற்றி விசாரிக்கும்

கொழும்பு, வெள்ளி நேற்று இலங்கை வானொலியில் நடைபெற்ற தீ விபத்து சம்பந்தமாக உடன் விசாரணை நடத்த இரகசிய பொலிசார் அழைக்கப்பட்டுள்ளனர். இரகசிய பொலிசாருக்கு உதவும் வகையில் பரிசோதனை நடத்த அரசாங்க பரிசோதனை இலாகாவும் அழைக்கப்பட்டுள்ளது. தீ விபத்துக்கான காரணம் எதுவென்று இன்னும் தெரியாது.

நேற்றுக்காலை பதினொரு மணிக்குக் கொழும்புவானொலி நிலைய ஒலிபரப்புக கலைக் கூடம் ஒன்று முற்றிலும் சேதமடைந்தது. தீயை ஒருமணித்தியாலம் செயலாற்றியே [illegible] தீயணைப்புப் படையினர் அணைத்தனர். தீயணைக்கப் பட்ட பின்பும் தீ பிடித்த இடத்தில் புகைமண்டலங்கள் தென்பட்டன.

## ஐக்கிய பண்டகசாலை கடைத் திறப்பு விழா

தொல்புரம், வெள்ளி தொல்புரம் மத்திய ஐக்கிய பண்டகசாலையின் புதிய கடைத் திறப்புவிழாக் கூட்ட வைபவம் 6-2-65 சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் சங்கத் தலைவர் திரு. கோ. கிருஷ்ணர் தலைமையில் நடைபெற்றது.

வட்டுக்கோட்டை முன்னாள் எம். திரு. அமிர்தலிங்கம் கொடியேற்றி வைத்தார். தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலை மாணவிகள் கூட்டுறவுப்பாடல் பாடினர். வடபகுதிக் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். கே. பொன்னுத்துரை தீபம் ஏற்றி புதிய கடையைத் திறந்துவைத்தார்.

முகாந்திரம் திரு. இ. பி. இராசையா ஜே. பி. விற்பனையை ஆரம்பித்து 25 ரூபா காசோலையைச் சங்கத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். தலைவர் தமது முன்னுரையில் சங்கம் ஸ்தாபித்த காலம் தொட்டு இன்று வரை உள்ள நிலைமையை விரிவாக எடுத்துரைத்தார்.

எஸ். கே. பொன்னுத்துரை, காரியாலய பரிசோதகர் மு. பாலசுப்பிரமணியம், அ. அமிர்தலிங்கம், சங்க உபதலைவர் சி. போ. கந்தையா, திருமதி அ. மங்கையர்க்கரசி, முகாந்திரம் இ. பி. இராசையா ஜே. பி., க. சுப்பிரமணியம், சங்கத் தனாதிகாரி க. தர்மரத்தினம், சி. பூலோகராசா, சங்கக் காரியதரிசி சி. வரதராசா ஆகியோரும் கூட்டுறவு இயக்கம் பற்றி உரை நிகழ்த்தினர். முடிவில் சங்கச் செயலாளர் நன்றியுரை கூறினர்.

## பஜனை

தொல்புரம், வெள்ளி தொல்புரம் ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில், தொல்புரம் மத்திய சனசமூகநிலைய வாசிகசாலையினர் தைமாதக் கடைசி வெள்ளிக்கிழமை நடத்திய பஜனையில் அதிகமானவர் பங்குபற்றினர்.




சுகவீனத்தின்போது

புத்துணர்ச்சி நல்க வல்லது

பார்சிபும் நிர் 8 ஓடிக் கோலான்

காய்ச்சல் குணமுள்ள புருவத்திற்கு இதமளித்து சுக நித்திரையைத் தூண்டுகின்றது.

கைவசம் ஒரு போத்தலை வைத்திருங்கள்.

PAR 5/63

தங்கமுலாம் பூசப்பட்ட கவர்ச்சிகரமான

சவரின் வளையல்கள்

ஐந்துவருடம் உத்தரவாதம் பெற்றவை




உண்மையான தங்கநகைகளுக்கு நிகரானது. அழகிலும் உருவ அமைப்பிலும் சவரின் தங்கநகைகளுக்கு ஒப்பானது. சகல வைபவங்களுக்கும் உபயோகிக்கக்கூடிய வகையில் நவீன உருவ அமைப்புக் கொண்டவை. தங்கமுலாம் பூசப்பட்ட சவரின் வளையல்கள் பற்றிய எங்களின் நிபந்தனைகள்:- உத்தரவாதமளிக்கப்பட்ட குறிப்பிட்ட கால எல்லைக்குள், நிறம் மற்றும் சகல வளையல்களும் கட்டணம் எதுவுமின்றி மீண்டும் தங்கம் பூசிக்கொடுக்கப்படும். எங்களால் பொறுப்பேற்கப்படும் ஆடர்கள் வி. பி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

M 43, M 39, M 41, M 36, M 3, M 35
M 37, M 36, M 40, M 46, —
எந்த ஜோடி உருவ,அமைப்புக்கொண்ட
ஒரு ஜோடியின் விலை ரூபா 5-00

M 42 ஜோடி ரூ. 6-00, M 30 ஜோடி ரூ. 7-00 M31 ஜோடி ரூ 8-50. M 27 ஜோடி ரூ 12-50, M 32 ஜோடி ரூ. 12-50, M 49 ஜோடி ரூ. 15-00. M 29 ஜோடி ரூ. 15-00 M 47 ஜோடி ரூ. 18-50.

ஈ. பிரான்சிஸ் பெரேரா அன்ட் கம்பனி

12, யட்டிநுவர வீதி, கண்டி.

குதுகல வாழ்வுக்கு மார்க்கம் நல்ல ஆரோக்கியமே!

இதை அளிக்கிறது



நேத்திராலோகதைலம்

இது பீனிசம்,தடிமன்,நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லாவித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து பொடுகு, இளநரை ஆகியவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடன் நீண்டு வளரச் செய்கிறது.

தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.

½ போத்தல் ரூ. 8/- தபால் செலவு சதம் /-65.

வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு தினசரி காலை 8-30 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரை டாக்டர் ஒருவர் இருப்பார்.



★

டப்ளியூ. கே. ஜினதாஸ, ஆயுர்வேத வைத்தியர், 161, நோரிஸ் ரோடு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வானொலியில் வள்ளுவர் தினம்

## விசேஷ நிகழ்ச்சிகள் ஒரு வாரம் நடைபெறும்

நல்லூர், சனி

இலங்கை வானொலி திருவள்ளுவர்தினத்தையொட்டி அடுத்த வாரம் பல விசேஷ நிகழ்ச்சிகளை ஏற்பாடுசெய்துள்ளது. ஒரு வார காலம் வரை நடைபெறவிருக்கும் விசேஷ நிகழ்ச்சிகளில் இசை, சிறுவர் நிகழ்ச்சிகள், பேச்சுக்கள் என்பன இடம்பெறுகின்றன.

இவ்வாண்டு திருவள்ளுவர் தினம் மாசி உத்தரதினமாமாகிய இம்மாதம் 18-ம் திகதி வியாழக்கிழமை கொண்டாடப்படவிருக்கின்றது. சைவத்திற்கும் தமிழுக்கும் அருந்தொண்டாற்றிய நாவலர் பெருமான் சொல்லியவாறு மாசி உத்தரத்தன்று இலங்கையிலுள்ள பல கழகங்களும் சங்கங்களும் வள்ளுவர் தினத்தைக் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளன. வானொலி பகுதியினர் ஏற்பாடுசெய்திருக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளில் 18-ம் திகதி முதலியார் செ. சின்னத்தம்பியின் 'வள்ளுவர் கடவுட் கொள்கை' பற்றிய சொற்பொழிவு இடம்பெறுகின்றது.

---

# மருந்துவகைகள் இறக்குமதி

கொழும்பு, வெள்ளி

சுகாதார இலாகாவின் மருந்து இறக்குமதி ஆலோசனைச்சபை ஏற்றுமதி இறக்குமதி இலாகாவுக்கு அனுப்பி வைத்துள்ள குறிப்பொன்றில் மருந்துவகைகள் இறக்குமதியாளர்களுக்கு அவற்றை இறக்குமதிசெய்ய உடனடியாக லைசென்ஸ் வழங்குமாறு கோரியுள்ளது. இப்பொழுதுள்ள மருந்து தட்டுப்பாட்டை தவிர்க்கும்பொருட்டு உடனடியாக இறக்குமதி லைசென்ஸ் வழங்கப்படவேண்டியது அத்தியாவசியம் என அந்தக் குறிப்பில் கோரப்பட்டுள்ளது. ஒவ்வொரு இறக்குமதியாளருக்கும் இந்த வருடத்தில் அளிக்கப்பட்ட கோட்டாவில் 30 சதவிகிதத்தையாவது உடனடியாக இறக்குமதிசெய்ய அனுமதிக்குமாறு மருந்துவகைகள் இறக்குமதி ஆலோசனைச்சபையார் கோரியுள்ளார்கள்.

---

# சனசமூக நிலைய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி

"எமது சமூகம் முன்னேற வேண்டுமானால் கல்வியறிவு பெருகவேண்டும். நூல் நிலையங்கள், சனசமூக நிலையங்கள், கைத்தொழில் நிலையங்கள் அமைத்தல் வேண்டும். முற்போக்கான வழிகளில் செயல்படல்வேண்டும். எதையும் ஒற்றுமை மூலம்தான் உருவாக்க முடியும்" என்று வட்டக்கச்சி, ஹட்சன் வீதியில் 'சனசக்தி சனசமூக நிலைய அங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு முக்கிய பேச்சாளராகக் கலந்துகொண்ட திரு. என். செல்லையா பேசுகையில் குறிப்பிட்டார்.

பின்வருவோர் நிலைய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்:- திரு. கி. கிறிஸ்தியாம்பிள்ளை, உப தலைவர்:- திரு. ச. வேலன், காரியதரிசி:- திரு. இ. பிரான்சிஸ் சேவியர், உப காரியதரிசி:- க. தேவதாஸ், தனாதிகாரி:- திரு. வே. சின்னையா, உப தனாதிகாரி:- திரு. ஈ. தோமாஸ், போஷகர்- திரு. ப. சின்னத்தம்பி.

ஒன்பதுபேர் கொண்ட பொது நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

# நிதி மந்திரி வரும்போது அதிருப்தி தெரிவிப்போம்

## எஸ். ஜே. வி. அறிக்கை

யாழ்ப்பாணம், சனி

கூட்டுஅரசாங்கத்தின் நிதி மந்திரி என்ற முறையில் டாக்டர் என். எம். யாழ்ப்பாணத்துக்கு வந்து உத்தியோக ரீதியான ஆடம்பரவைபவங்களில் கலந்துகொள்வதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி அங்கத்தவர்கள் தகுந்தமுறையில் தமது அதிருப்தியைக் காட்டத் தீர்மானித்திருக்கிறார்கள் என்று தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ. ஜே. வி. செல்வநாயகம் இன்று விடுத்த ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் திரு. செல்வநாயகம் குறிப்பிட்டுள்ளதாவது-

யாழ்ப்பாணத்தில் புதிய அரசாங்கக் காரியாலயக் கட்டிடத்தைத் திறந்துவைக்கும் பொருட்டு நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா யாழ்ப்பாணத்துக்கு வரவிருப்பதாக அறிகிறேன். யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கும் பொதுக் கூட்டங்களில் பேசுவதற்கும் அவருக்கு ஜனநாயக உரிமை இருக்கிறதெனினும் சிங்களம் மட்டும் கொள்கையையுடைய அரசாங்கத்தின் மந்திரியொருவர் உத்தியோகரீதியில் ஆடம்பரமான வைபவங்களில் கலந்துகொள்ளவருவதற்கு எதிர்ப்புக்காட்டுவதைத் தமிழரசுக் கட்சி கைவிடமுடியாது.

டாக்டர் என். எம். பெரேரா கூட்டரசாங்க மந்திரிசபையில் சேர்ந்ததன் மூலம் தமிழ்பேசும் மக்களின் மொழி உரிமை சம்பந்தமாக அவரது கட்சி கொண்டிருந்த கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிங்களம் மட்டும் கொள்கையை ஏற்றுக்கொண்டார். எனவே கூட்டரசாங்கத்தின் நிதிமந்திரி என்ற முறையில் உத்தியோகரீதியில் ஆடம்பர வைபவங்களில்கலந்துகொள்ள அவர் வரும்பொழுது தகுந்த முறையில் எமது அதிருப்தியைக் காட்டவேண்டுமென்று தமிழரசுக்கட்சி அங்கத்தவர்கள் கருதுகின்றனர்.

---

# தேர்தல் வாபஸ்

கொழும்பு, வெள்ளி

மினிப்பே தொகுதியில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடவதென நியமனப் பத்திரம் தாக்கல் செய்த திரு. பெனார்ட் மடுகெல்ல தேர்தலில் இருந்தும் வாபஸ்பெற்றுக் கொண்டார். ஐ. தே. கட்சி அபேட்சகர் திரு. ஏ. பி. கருணாதிலக்காவுக்கு ஆதரவளிக்குமுகமாகவே திரு. மடுகெல்ல போட்டியிலிருந்தும் வாபஸ் பெற்றுக் கொண்டதாக அறியப்படுகிறது.

# நகரப்பகுதி . . . . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. இ. மைக்கேலின் கைம்பெண் திரேசம்மா, பிள்ளைகள். மூத்த பெண்பிள்ளைக்கு 17 வயது. 50-00
(ஒரு துவாய்)

திரு. எஸ். அந்தோனியின் கைம்பெண் செல்லம் பிள்ளைகள், மகன் 10 வயது, பெண்பிள்ளைகளுக்கு 3 வயதும், ஒருவயதும். 55-00
(இரண்டு துவாய்)

திரு. எஸ். அமதாசின் கைம்பெண் செபமாலை, ஒரு ஆண் ஒருமாதம். 35-00
(ஒரு துவாய்)

திரு. பிலிப்பின் கைம்பெண் பிலோமினா 55-00
(ஒரு துவாய்)

திரு. கே. கென்றியூரின் தாயார் லூர்தம்மா, தகப்பன் இருக்கிறார் 15-00

திரு. இ. ஜேசுதாசனுடைய கைம்பெண் மேரிறீற்ரு, கர்ப்பவதி. 85-00
(ஒரு துவாய்)

---

# பஸ் நிலையத்தில் கையும் மெய்யுமாக பிடிபட்ட திருடன்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் ஒரு சிறுமியின் கழுத்திலிருந்த சங்கிலியைத் திருட முயன்ற திருடன் ஒருவன் கையும் மெய்யுமாகப்பிடிபட்டு பொலிசில் ஒப்படைக்கப்பட்டான்.

நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் சாவகச்சேரிக்குச் செல்வதற்காக ராஜநாயகி என்ற எட்டு வயதுச் சிறுமியும் அதன் தாயாரும் பேத்தியாரும் பஸ்ஸிற்காகக் காத்துநின்றனர். அச்சமயம் ஒரு திருடன் ராஜநாயகியின் கழுத்திலிருந்த சங்கிலியைத் திருடமுயன்றான். சிறுமி கூச்சலிடவே தாயாரும் கூச்சலிட்டபடி திருடனைப் பிடித்துக்கொண்டார். பஸ் நிலைய நேரப் பொறுப்பாளர் இதைக் கண்டதும் உடனடியாக அவ்விடத்திற்குச் சென்று திருடனைப் பிடித்துப் பொலிசாரிடம் ஒப்படைத்தார். குருநாகலையைச் சேர்ந்த இத்திருடன் இப்பொழுது றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளான்.

---

# இலைவித்தியாசம் உயிரைக் குடித்தது

உடுப்பிட்டி, வெள்ளி

இலைக்கோவாவுடன் வேறொரு இலையையும் சேர்த்துக்கறிசமைத்து உண்டதால் அல்வாய் தெற்கு மூன்றாம் கிராமசேவகரின் தாயாரும் உடையார் மனைவியுமான தெய்வானை என்பவர் மரணமடைந்தார். இவருடன் இதே கறியை உண்ட [illegible] பொலிஸ இன்ஸ்பெக்டர் கந்தையாவும் அவர் [illegible] செல்லாச்சியும் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தெய்வானையின் மரணம் குறித்து விசாரணைசெய்த திடீர்மரணவிசாரணை அதிகாரி, நச்சுப்பூண்டு இலைக்கும் இலைக்கோவாவுக்கும் வித்தியாசம் புலப்படாத [illegible] குதி காரணமாகையால் [illegible] செயலாக ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

# ஹிந்திக்கு உபதேசமும் தமிழின் வேதவாக்கியமும்!! இதில் ஆர் மெய்யினர்?

ஒரு கொடியில் ஆராய்ந்தால் நல்ல பக்கம் உடனே திரும்பலாம்!!! 'அவகாசந் தேவையில்லை" – வல்லவனுக்கு மேல் வல்லவன் வையகத்தில் உண்டு" ஹிந்தி வல்லமைக்கு இடந்தரும் நிலமும் சந்தர்ப்பமும் இவ்வல்ல ஹிந்திவல்லமையை:-(1) கடவுளின் தனிப்பட்ட வல்லமையும் (2) தமிழின் வல்லமையும் சேர்ந்து பரீட்சை வைக்கின்றன! பொய்யா? மெய்யா?

அறிஞருக்கு மேலான தமிழ் அறிஞரை — உலகின் ஞானக் கலைக்கண்ணைத் தேடிக் கொள்க!! அருள்நாத ஒலியும் —பிரணவப் பாலும்-சிவசாம்பிராச்சியக் கடாட்சமும் பெற்ற தமிழ்மொழியுடன் போட்டி போட்டுக் கடவுளின் பகையையும்- பிணக்கையும் வளர்க்காதே.

ஹிந்திப் பையுக்குள் தமிழைத் திணித்துக் காட்டப் பாராதே. 1-"தமிழ் விடுதூதும் 2- சொக்கநாதர் உலாவும்" ஹிந்திப் பைமுட்டையைக் கிழித்து-படைப்பலனை வெட்கமாக்கும் தெய்வ நூல்கள்!!!

"32 தருமங்களைப்" பணயம் வைத்தாடதே. இம்மைக்கும்-மறுமைக்கும் உலகக் குன்றில் வைத்ததீபம் "சிவத்தமிழே-"கால் - அரை - முக்கால் மணி தரும்-குண்டு பீரங்கி அனுப்பதர்களும் அறிவாரா? வெட்கமும்-துக்கமும்- பாவமும் உலகை ஆளுதலா? அறிஞர் கையே உலகின் செங்கோல்! தொகை மனிதர் ஆளும் இயக்கம் எதில்? "காந்தியம்" இதனை ஆராயவில்லையே!!!

வித்துவக் கலைஞன் - சன்மார்க்கதவகூடம், கந்தரோடை, யாழ்ப்பாணம். 1581

---

# சிங்கள வகுப்புகள்

சிங்கள எஸ். எஸ். சி. சித்தியடைந்த ஆசிரியையால் சிங்களம் கற்பிக்கப்படும். மாதம் 10 ரூபாய். மாணவர் மாணவிகளுக்கு வசதிப்பட்ட நேரம் ஒழுங்குசெய்யப்படும். செல்வி வே. ஜயந்தி, 247, பருத்தித்துறை வீதி, சங்கிலித்தோப்பு, நல்லூர், யாழ்ப்பாணம். 1580

---

# 'மொழி உரிமை போராட்டம் முடியவில்லை'

துணுக்காய், வெள்ளி

"போராட்டநிதியிலே தொழிற்சாலைகளை நிறுவி அநேகரின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏன் தமிழரசுக் கட்சி நீக்கவில்லை என்று எம்மில் சிலர் கேட்கிறார்கள். ஆனால் இன்னும் மொழியுரிமைப் போராட்டம் முடியவில்லை என்பதை அவர்களுக்குக் கூற விரும்புகிறேன்." என்று குமரபுரம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மைதானத்தில் திரு. பொ. சரவணமுத்து தலைமையில் கிளிநொச்சி தமிழரசுக்கட்சி வேட்பாளர் வித்துவான் பண்டிதர் கா. பொ இரத்தினத்தை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் திரு செ. இராசதுரை கூறினார்.

திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் சேகசையில் பாராளுமன்ற ஸதானத்தைப் பெறுவதற்காக உங்கள் மத்தியிலே வரும் கட்சியல்ல. எங்கள் கட்சி. சென்ற 16 ஆண்டுகளாக ஒரே கொள்கையுடன் ஒரே நோக்கத்துடன் தமிழ் இனத்தின் உரிமைக்காகப் போராடிவரும் கட்சிதான் தமிழ்அரசுக் கட்சி" என்று கூறினார்.

இக்கூட்டத்தில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், வி. தர்மலிங்கம், கமலநாதன், இராசரத்தினம், [illegible]ராயுத சிங்கம் சி எல. நாதன், சுப்பையா, கனகசிங்கம், ஆகியோரும் பேசினார்கள்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள "சிங்கர்" கைத் தையல் மெஷின் ஒன்று விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் நல்லூர்க் கந்தசுவாமிகோயிலுக்குமுன் உள்ள ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸில் தொடர்பு கொள்ளவும். 1568

---

பலாலி ரோட்டில் கிணற்றுடன் கூடிய $16\frac{1}{2}$ பரப்பு காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் விற்கப்படும். தொழிற்சாலை, வீடு முதலியவற்றிற்கு முக்கியமானது. விபரம்: மூ. ச. நடராசா, அம்மன் கோவிலடி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 1577

---

B. S. A. 3.5 CN வரிசை மோட்டசயிக்கிளும் பாட்சுகளும் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு வே. கந்தசாமி, பொலிஸ் ரேடியோ றூம், யாழ்ப்பாணம். அல்லது அராலி வடக்கு. 1574

---

திருநெல்வேலி காற்சந்தியிலிருந்து கொக்குவில் செல்லும் ரோட்டின் அருகாமையில் வடக்கே செல்லும் புதுரோட்டில் 12 பரப்பு காணி மொத்தமாகவும் சிறு பகுதிகளாகவும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: இல. 1570, C/o 'ஈழநாடு'. 1570

---

நல்லநிலைமையிலுள்ள சவர்லட் (4400) 30 தொன் (பெற்ரோல்) மொடல் இரு லொறிகள் விற்பனைக்கிருக்கின்றன. நேரில் பார்வையிட்டு விலைகோரவும். K வேலுப்பிள்ளை, பெற்ரோல் செற்றடி தண்ணியூற்று, முள்ளியவளை. 1575

---

முள்ளியவளை, மகா வித்தியானந்த கல்லூரிக்கு சமீபமாய் மெயின் ரோட்டருகில் கொள்விலையாதளம் (15 பரப்பு) பலவகை பிரயோசனங்கள் கட்டிடங்களுடன் இன்னும் பல கடைகளும் கட்டவசதியமைந்த காணி விற்பனைக்குண்டு, A. K. குமாரசாமி, மூர்த்தி மில், முள்ளியவளை. 1576

---

## தேவை

விற்பனையாளருடன் ரூபா 3000-00 பிணையும் செலுத்தக் கூடிய முன் அநுபவமும், நிர்வாகத் திறமையும் கல்வித் தகைமையும் கொண்ட கன்ரீன் மனேஜர் தேவை. தகைமைக்கேற்ற சம்பளம். காரியதரிசி, நோதேன் ஸ்போட்ஸ் கிளப், இராசாகட்டிடம், பெரியகடை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்; நிர்வாக அதிகாரி. 1564

---

முன் அநுபவமும் நிர்வாகத் திறமையுமுள்ள பெண் விகிதர்கள் தேவை. நாஷனல் அச்சகம், 1-ம் மாடி இராசா கட்டிடம், பெரியகடை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். நிர்வாக அதிகாரி. 1568

---

## தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலேக் இனம் தொய்வுக்கு 10 நாள் மருந்து. 13-55 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50.

வைத்தியர் பரிபூரணானந்தா கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

## Room Wanted

Wanted within Jaffna municipal limits a room with seperate entrance and with or without board, for an officer. S Nadarajah, Mathagal 1582

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வானொலிகள் விநியோகம்

கொழும்பு, வெள்ளி

மேற்கு ஜெர்மனியிலிருந்து வருவிக்கப்பட்ட வானொலிப் பெட்டிகள் அங்கீகரிக்கப்பட்ட கிராம முன்னேற்ற, சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட விருக்கின்றன. கிராம முன்னேற்றச் சங்கங்கள் அவை கிராமப்புறத்தில் உள்ளவையாயினும், நகரப்புறங்களில் உள்ளவையாயினும் அவை மூலம் மக்கள் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்கக்கூடியதாயிருந்தால் அவற்றுக்கு வானொலி வழங்கப்படும்.

## அறிவித்தல்

யாழ்ப்பாண பிரதேசக் கலா மன்றத்தின் நாட்டுப்பாடல், நாட்டுக்கூத்து குழுவினர் ஆதரவில் 15-2-65 இரவு 7 மணி தொடக்கம் 10-30 வரை யாழ் திறந்தவெளியரங்கில் யாழ். நகர முதல்வர் அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணம் நாட்டுக்கூத்துக் கலைஞரும் அண்ணாவிமார்களும் ஒருங்கு சேர்ந்து நடிக்கும்,

நீலகண்டன் அல்லது தேவசகாயம்பிள்ளை என்னும் உண்மைச் சரிதை நாடகத்தைக் காணத்தவறாதீர்கள்.

தயாரிப்பாளர்:ம.யோசேப்பு (பூந்தான்) 1608


REGAL — JAFFNA

NOW SHOWING

Edmund Purdom

in

WHITE SLAVE SHIP

(Colorscope)



மனோகரா (யாழ்ப்பாணம்) (போன்; 485

Daily 4-45, 7-00 & 9-45

MANHUNT IN THE JUNGLE

(Serial)



ராஜா சினிமா (சுழிபுரம்)

மனோகர்

நடிக்கும்

கொஞ்சும்குமரி



5-வது வெற்றி வாரம்!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்: மாலை 2-30, இரவு 6-30, 9-30

சனி, ஞாயிறு 4 காட்சிகள்:

காலை 10-30, மாலை 2-30, இரவு 6-30, 9-30



சிவாஜி கணேசன் - சாவித்திரி

மற்றும் பலர் நடித்த

கர்ணன்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

மற்றும் 6 சினிமாஸ் திரைகளில்

ஜெமினி கணேசன் - சாவித்திரி

நடித்த

கற்பகம்


# இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## முதன்மந்திரிகள் மகாநாடு

தமிழ்நாட்டில் ஏற்பட்ட மொழிக்கிளர்ச்சி காரணமாக ஆட்சி மொழி பற்றியும் நேருவின் உறுதிமொழி பற்றியும் இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது பற்றியும் ஆலோசனை செய்யும் பொருட்டு எல்லா ராஜ்ய முதன் மந்திரிகளையும் கொண்ட மகாநாடு ஒன்றை இம்மாதம் 23-ம், 24-ம் தேதிகளில் பிரதமர் சாஸ்திரி கூட்டுகிறார். முக்கியமான இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளுமாறு சகல முதன்மந்திரிகளையும் அவர் தந்தி மூலம் கேட்டுள்ளார்.

## இந்திரா, காமராஜ் சென்னை வந்தனர்

தகவல் ஒலிபரப்பு மந்திரி திருமதி இந்திரா காந்தி இன்று பிற்பகல் புதுடில்லியிலிருந்து சென்னை வந்து சேர்ந்தார். இந்திபேசாத மக்களுக்கு எவ்வித தீங்கும் நேரிடமாட்டாது என்று பிரதமர் சாஸ்திரி நேற்றிரவு அளித்த உறுதிமொழியை அவர் நினைவூட்டினார். காங்கிரஸ் அக்ராஸனர் திரு. காமராஜர் இன்று சென்னை வந்து சேர்ந்தார். மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்திறங்கியதும் அவர் நேராக முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் வீட்டுக்குச் சென்று தற்போதைய நிலைமை பற்றி ஆராய்ந்தார். இவர்களின் சந்திப்பின்போது நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியும் சமூகமளித்திருந்தார்.

## ராஜாஜி, அண்ணாவை சின்கா சந்தித்தார்

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து மத்திய அரசாங்க மந்திரி திரு. சத்திய நாராயணசின்கா திரு. ஸி. ராஜகோபாலாச்சாரியாரையும் தி. மு. க. தலைவர் திரு. ஸி. என். அண்ணாதுரையையும் சென்று சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

## மந்திரிசபை ஆலோசனை

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள நிலைமை பற்றி பிரதமர் சாஸதிரி இன்று தமது மந்திரிசபையைக் கூட்டி ஆலோசனை செய்தார். ஒவ்வொரு நாளும் தமது சகாக்களுடன் ஆலோசனை செய்யவிருப்பதாக அவர் தெரிவித்தார். ஜனாதிபதி டாக்டர் ராதா கிருஷ்ணனையும் பிரதமர் சென்று சந்தித்தார். சுமார் ஒரு மணிநேரம் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

### சுப்பிரமணியம் கோரிக்கை

மந்திரி பதவியிலிருந்த ராஜினாமாச் செய்த திரு. ஸி. சுப்பிரமணியம் நேற்று விடுத்த ஒரு வேண்டுகோளில் மாணவர்கள் தமது கிளர்ச்சி மூலம் தமது உணர்ச்சியை போதிய அளவு வெளிக்காட்டி விட்டனரென்றும் இனி மொழிப் பிரச்னைக்குத் தீர்வு காணும் பொறுப்பைத் தலைவர்களிடம் ஒப்படைத்து விட்டு மாணவர்கள் பாடசாலைக்குத் திரும்பும்படியும் கேட்டுக் கொண்டார்.

### பொள்ளாச்சியில் 10 பேர் பலி

இன்று தமிழ்நாடு முழுவதிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட சமயத்தில் பொள்ளாச்சியில் வன்முறைச் செயலில் ஈடுபட முயன்ற ஆர்ப்பாட்டக்காரர்மீது இராணுவத்தினர் சுட்டதில் பத்துப்பேர் மாண்டதாக அறியப்படுகிறது. டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் நிலையத்தைத் தாக்கி தீ வைக்க அவர்கள் முயன்றனர். சென்னைக்கருகில் 'ஹௌரா' மெயில் ரயிலை ஆர்ப்பாட்டக்காரர் நிறுத்தி இருபெட்டிகளைச் சேதப்படுத்தினர். கோயம்புத்தூருக்கு 80 மைல் தூரத்தில் உள்ள சோமனூர் ரயில் நிலயம் ஆர்ப்பாட்டக்காரர்களால் தீவைத்து சாம்பராக்கப்பட்டது. கூடலூர் பொலிஸ நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்களைக் கலைக்க பொலிசார் சுட்டனர். திருவெற்றியூர், ஆர்க்காடு, ஜோலார்பேட்டை ஆகிய இடங்களிலும் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

### புதுச்சேரியில் 4 பேர் பலி

புதுச்சேரியில் நிலைமை மோசமானதைத் தொடர்ந்து இராணுவத்தினர் அழைக்கப்பட்டனர். புதுச்சேரி ரயில் நிலயம் தீக்கிரையானது. ஆர்ப்பாட்டக்காரர்மீது பொலிசார் சுட்டதில் இரு ரிக்ஷாக்காரர்களும் இரு மீனவர்களும் மாண்டனர். ஆர்ப்பாட் [illegible] [illegible] விளைத்தனர்.

# கோவை திருச்சியில் மேலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்க காரியாலயங்களிலும் வேலைகள் சீராக நடைபெறவில்லை, சென்னை நகரை அடுத்த இடங்களுக்கு ரயில் சேவை நடைபெறவில்லை. சென்னை மத்திய ரயில் நிலயத்துக்கு வந்துசேரவேண்டிய மங்களூர், கொச்சி 'எக்ஸ்பிரஸ்' ரயில்கள் அதிகநேரம் தாமதித்தே வந்தன. கல்கத்தா, பம்பாய் 'எக்ஸ்பிரஸ்' ரயில்களும் நேரம் தாமதித்தே வந்துசேர்ந்தன; ஆனால் மத்திய ரயில் நிலயத்திலிருந்து புறப்படும் ரயில்கள் யாவும் குறித்த நேரப்படி புறப்பட்டுச்சென்றன. சென்னை நகரில் ஆயுதம் தாங்கிய பொலிசசர் ரோந்து சுற்றிவருகின்றனர். பாலங்கள், மற்றும் கேந்திர ஸ்தானங்களில் ஆயுதந் தாங்கிய விசேஷ பொலிசார் காவல்புரிந்துவருகின்றனர். சென்னையிலிருக்கும் நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி நகர பொலிஸ் கட்டுப்பாட்டு நிலயத்துக்குச் சென்று பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பொலிஸ உயர்தர அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

## தமிழுக்காக இருவர் தீக்குளிப்பு

தமிழ்மொழிக்காக தமிழ் நாட்டில் நேற்று இருவர் தீக்குளித்தனர். திருச்சிக்கு அருகேயுள்ள ஐயம்பாளையம் என்ற இடத்தில் துவக்கப்பள்ளியொன்றின் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய வீரப்பன் என்பவர் நேற்றுமாலை தமது உடல்மீது பெட்ரோல் ஊற்றித் தீ மூட்டி தமது உயிரை நீத்தார். கோயம்புத்தூருக்குச் சமீபத்திலுள்ள சத்தியமங்கலத்தில் ரங்காசமுத்திரம் என்ற இடத்தில் விவசாயி ஒருவர் நேற்றுத் தமது உடலில் பெட்ரோல் ஊற்றித் தீ மூட்டிக் கொண்டார். உடனடியாக அவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதிலும் அவர் இறந்துவிட்டதாகக் கடைசியாகக் கிடைத்தசெய்தியொன்று தெரிவித்தது. இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி சமீபத்தில் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை ஐவர் தாமாக தமது உயிரைத் துறந்துள்ளனர்.

## அண்ணாதுரை கோரிக்கை

மொழிப்பிரச்னை காரணமாக ஏற்பட்ட கருத்து வேற்றுமையின் விளைவாக மத்திய மந்திரிசபையிலிருந்து உணவு விவசாய மந்திரி பதவியை ராஜினாமாச் செய்ததற்காக திரு. சுப்பிரமணியத்தை திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் திரு. ஸி. என். அண்ணாதுரை பாராட்டினார். திருவாளர்கள்: சுப்பிரமணியம், அழகேசன் ஆகியோரின் ராஜினாமாவை அவர் வரவேற்றார். மத்திய அரசாங்கத்தில் மந்திரி பதவி வகிக்கும் தென்னாட்டவர் அனைவரும் ராஜினாமாச் செய்து வெளியேற வேண்டிய சமயம் வந்துவிட்டது என அவர் தெரிவித்தார். மாணவர்களின் கிளர்ச்சி இந்தி பேசாத மக்களின் உணர்ச்சியைத் தெளிவாகத் தெரிவித்து விட்டது என்றும் இனி மாணவர் தமது கிளர்ச்சியைக் கைவிட வேண்டுமென்றும் திரு. அண்ணாதுரை கேட்டுக் கொண்டார்.

## விநோபாஜி உண்ணாவிரதம்

தமிழ் நாட்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிபெரும் சேதத்தை ஏற்படுத்தியதையிட்டு பூதான இயக்கத் தலைவர் ஆச்சார்ய விநோபாபாவே நீண்ட நாள் உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளார். கிளர்ச்சி கைவிடப்படும் வரை அவர் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக சர்வோதய வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

## தமிழ்நாடு கவர்னர் வேண்டுகோள்

தமிழ்நாடு கவர்னர் திரு: ஜெயசாமராஜ உடையார் இன்று விடுத்த ஒரு செய்தியில் தமிழ்நாட்டில் நடைபெற்றுவரும் கிளர்ச்சியும் அதனால் ஏற்பட்ட சம்பவங்கள் குறித்தும் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார். நாட்டில் அமைதியைப் பாதுகாக்க முன்வரும்படி அவர் நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டார். அமைதி நிரம்பிய சூழ்நிலை மக்களின் அச்சத்தை நீக்குவதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு அரசாங்கத்துக்கு அவகாசம் கொடுப்பதாக இருக்கும் என்றும் கவர்னர் தெரிவித்தார்.

## கடத்தல்காரருக்கு ரூ. 600 அபராதம்

மாவிட்டபுரம், வெள்ளி

இந்தியாவுக்குசெல்லவிருந்த பிரயாணி ஒருவர் 200 ரூபா பெறுமதியான 2 தங்கமோதிரங்களை சவர்க்காரத்திற்குள் வைத்து இந்தியாவுக்குக் கடத்திச் செல்ல முயற்சித்த போது பலாலி விமான நிலயத்தில் சுங்கப்பகுதி அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டது மேற்படி சுபர் கொண்டுசெல்ல முயற்சித்த தங்கமோதிரங்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் 600 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

### மைசூர் முதன் மந்திரி வரவேற்பு

ஆர்ப்பாட்டத்தை ஒத்திவைப்பதென கிளர்ச்சிச்சபை செய்த முடிவை மைசூர் முதன் மந்திரி திரு; நிஜலிங்கப்பா வரவேற்றார்.

ஆச்சார்யா கிருபாளினி இன்று கருத்துத் தெரிவிக்கையில் நாட்டின் சகல தலைவர்களும் ஒன்று கூடி மொழிப் பிரச்னைக்குத் தீர்வுகாண வேண்டும் என்றார். உணவு மற்றும் முக்கிய பிரச்னைகளிருக்கையில் மொழிக்குக் கிளர்ச்சி நடத்துவது விந்தையாக இருக்கிறதென அவர் சொன்னார்.

## மாநகரசபைக் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநகர சபைக்கு இழுக்கென்றும் பல அங்கத்தவர்கள் சுட்டிக்காட்டியதைத்தொடர்ந்து பொலிசாருக்கு விடுத்தஅழைப்பை வாபஸ்பெறுமாறு மேயர் மீண்டும் மறு உத்தரவு பிறப்பித்தார். சென்ற கூட்ட அறிக்கையின் 12-வது பகுதி குறித்து திரும்பவும் ஆலோசிக்கப்படவேண்டுமென்ற திருத்தத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அடுத்து, செனட்டர் நடேசபிள்ளையின் மறைவு குறித்து திரு. அ. நாகராசா அனுதாபத் தீர்மானம் கொண்டுவந்தார். அது நிறைவேற்றப்பட்டு பின்னர் இருநிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஒன்றே முக்கால் மணி நேரம் நடைபெற்ற இக்கூட்டத்தில் இலவச புத்தக விநியோகம் பற்றி முன்னர் செய்யப்பட்ட தீர்மானத்தை அமுல் நடத்த மேயர் தவறிவிட்டதாக திரு. தெய்வேந்திரன் சுட்டிக்காட்டினார், நகரத்தின் சுகாதார சீர்கேடுகள் பலவற்றைப் பற்றி திரு. ஏ. ஜி. இராஜசூரியர் குறிப்பிட்டார் இதுசம்பந்தமாக திரு. தம்புத்துரையாவும் குறிப்பிட்டுப் பேசினார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org